1972 சனவரி 29]

வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் வேலே நிறுத்தம்

*132 வினு—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 20—6—1970-ம் நாளன்று வடார்க்காடு மாவட்ட பீடித் தொழிலாளர்கள் அனைவரும் வேலே நிறுத்தம் செய்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: (அ) ஆம்.

(இ) பீடிச் சட்டத்தை செயற்படுத்துதல், நிரந்தர வேலேக்கு உத்தரவாதம், வேலேயில்லாத காலங்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்குதல், 1968-69 1969-70 ஆகிய ஆண்டுக்களுக்கான பூரிப்பு ஊதியம் முதலான கோரிக்கைகள் மீது பீடித் தொழிலாளர்கள் வேலே நிறுத்தம் செய்தனர்.

திரு. கே. ஏ வகாப்: தலேவரவர்களே, இப்பொழுது அவர்கள் கூறியுள்ள குறைபாடுகளெல்லாம் நீக்கப்பட்டு விட்டதா ? அப்படி நீக்கப்படவில்லேயென்ருல் அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ? பாவம், பீடித் தொழிலாளர்கள் எவ்வளவோ இன்னல்களுக்கிடையே சிரமப்பட்டு வருகிருர்கள். ஆகவே அவர்களின் கோரிக்கையை, குறிப்பாக கூலி உயர்வு, வேலே நிரந்தரம், சுகாதார வசதி ஆகிய இவற்றிலாவது அக்கறை செலுத்த, முதலாளிகளே அணுகி ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: தலேவரவர்களே, அந்த பீடித் தொழில் முதலாளிகள் நீதி மன்றத்திலே ரிட் போட்டிருப்பதால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லே. ஆனல் தொழிலாளர்களுக்குத் தர வேண்டிய ஊதியம், பூரிப்பு ஊதியம் முதலியவைகளே முன்பணமாகக் கோர்ட்டில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள ஆவன செய்யப்படும்.

திரு. கே டி. கே. தங்கமணி: சார், பீடித் தொழிலாளர்களின் குறைந்தபட்ச ஊதியம் சம்பந்தமாக ஒரு குழு அரசு அமைத்திருக்கிறது. அந்தக் குழு தன்னுடைய முடிவை சீக்கிரமாக அரசுக்குக் கொடுக்க அரசு ஆணையிடுமா ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலேவரவர்களே, 6 திங்களுக்குள்ளாக அந்த அறிக்கையைத் தருமாறு தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

Working system for beedi workers

*133 Q.—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the Government have any proposal to introduce six days a week working system to the Beedi workers; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

DR. H. V. HANDE : May I know the reasons why there is such a delay with regard to introduction of beneficial measures and welfare measure among the beedi workers? Will the Government go on waiting till the Centre intervenes or gives some recommendation, or as an *ad hoc* arrangement is the Government prepared to comeforward with some sort of welfare measures to the beedi workers?

மாண்புமிகு திரு. என். வி நடராசன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே முன் கேள்விக்குச் சொன்ன விவரப்படி நீதி மன்றத்திலே வழக்கு உள்ளதால் ஒன்றும் செய்ய இயலவில்லை. விரைவில் அதைப்பற்றி முயற்சி எடுக்கப்படும்.

பசுவந்தனை உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு விடுதி

*** 134 வினா.—திரு எம். முத்தையா:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தாலுக்கா பசுவந்தனை உயர்நிலைப் பள்ளியில் மாணவர்கள் தங்கிப் படிப்பதற்காக ஹாஸ்டல் ஒன்று வேண்டுமென்று அரசுக்கு ஏதேனும் விண்ணப்பம் வந்ததா ?

(இ) ஆமெனில், அந்த விண்ணப்பங்கள் எப்போது வந்தது ?

(உ) அதுபற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ), (உ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, இந்த பசுவந்தனை ஹைஸ்கூல் வந்து ஏறத்தாழ 10, 12 வருஷங்கள் ஆகின்றன. இதற்குப் பலமுறை ஹாஸ்டல் வேண்டுமென்று நானே அமைச்சரவர்களுக்கும், மாவட்ட அதிகாரிகளுக்கும் அப்ளிகேஷன் அனுப்பியிருக்கிறேன். அங்குள்ள மாவட்ட நல அதிகாரிகள், பசுவந்தனை ஹைஸ்கூலுக்கு அரிசன, பின்தங்கிய மாணவர்கள் 6, 7 மைல்களுக்கு அப்பாலிருந்து படிக்க வருகிறார்கள், எனவே இந்த ஹைஸ்கூலுக்கு ஹாஸ்டல் தேவை என்று அவர்களுக்கும் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்வது குறித்து வருந்துகிறேன். இப்பொழுது இல்லையென்றாலும் இனிமேலாவது இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மாவட்ட நலத் துறை அதிகாரி பரிந்துரை செய்து அனுப்பிய பல விடுதிகளில் இந்த பசுவந்தனையும் ஒன்றாக வந்திருக்கிறது. அதனால் அது மாண்புமிகு உறுப்பினரவர்கள் கொடுத்த மனுவின் மீது அவர்கள் சிபாரிசு செய்தார்களா என்ற குறிப்பு இருக்கவில்லை. அவர்களது